22nd September 1961]

Paddy cultivation (Thanjavur district)

* 1731 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தஞ்சை ஜில்லாவில் காவிரிப் பாசனப் பகுதியில் எக்கருக்கு சராசரி நெல் விளைச்சல் எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The average yield of paddy in the Cauvery Delta area in Thanjavur district for the three years from 1957–58 to 1959–60 is 1,948 lb. per acre or 2,183 kilogram per hectare (paddy).

SRI N. R. THIAGARAJAN : தலைவர் அவர்களே, எங்கள் பகுதியில் ஒரு எக்கருக்கு குறைந்த பட்சம் 30 கலம் முதல் 50 கலம் வரை விளைகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் 15 லட்சம் எக்கருக்கு, 30 கலம் வீதம் பார்த்தால் மொத்தம் 9 கோடி இரு போகத்திலும் கிடைக்கும். அதைத் தமிழ் நாட்டில் தலைக்கு 3 கலம் வீதம் கொடுக்கலாமே. அப்படியில்லாமல் விளைச்சல் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ? அதை அதிகப்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தஞ்சாவூரில் ரொம்பக் குறைவாக இருந்தது. ஆனால், இப்பொழுது வருஷத்திற்கு வருஷம் அதிகமாகியிருக்கிறது. 1957–58–ல் சராசரி 1,863 ராத்தல் நெல்லாகவும், 1958–59–ல் 1,982 ராத்தலாகவும், 1959–60–ல் 1,999 ராத்தலாகவும் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது. அவர்கள் குறைவாகத்தான் விளைக்கிறார்கள். அவர்களிடம் நிலம் அதிகமாகத்தான் இருக்கிறது. மதுரையைப் பற்றி பெருமைப்பட இடம் உண்டு. கனம் அங்கத்தினர் அறிந்திருப்பார், அங்கே 2,318 ராத்தல் நெல்லும், 1,553 ராத்தல் அரிசியும் கிடைக்கிறது. ஆனால் எல்லா மாவட்டங்களையும் வைத்துப் பார்க்கும் போது, கனம் அங்கத்தினர்கள் பெருமைப்பட வேண்டியது சேலம் மாவட்டம்தான். அது அநேகருக்குத் தெரியாமல் இருக்கலாம். அங்கே ஒரு எக்கருக்கு சராசரி 2,482 ராத்தல் நெல்லும், 1,663 ராத்தல் அரிசியும் கிடைக்கிறது.

Coconut Palm Leaf Research Centre

* 1732 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னை ஓலை ஆராய்ச்சி நிலையம் எப்போது ஆரம்பிக்கப் பட்டது ?

(இ) அதன் நோக்கம் என்ன ?

(உ) அதனால் ஏற்பட்ட பலன் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No research centre for the study of Coconut Palm Leaves has been started in this State.

(*b*) & (*c*) Do not arise.

SRI N. MARUDHACHALAM : ஸார், கோவை ஜில்லாவிலே தென்னந் தோப்புகள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே அங்கு ஒரு தென்னை ஆராய்ச்சி சாலையை ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்காக ஒரு ஆராய்ச்சி நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை.